6810
(6184)

சிவமயம்.

# சிவபிரான் கருணையுஞ் சீவர்கள் கடமையும்.

இவ்வியாசம்

மகிபாலன்பட்டி வித்துவான் ஸ்ரீமத்

**மு. கதிரேசச்செட்டியாரவர்களால்**

எழுதப்பெற்று,

பூவாளூர் சைவசித்தாந்த சபையின்

ஐந்தாம் வருஷ பூர்த்திக்கொண்டாட்ட சபையில்

(7-3-15-ல்) வாசிக்கப்பெற்று

ஷை. பூவாளூர் சைவசித்தாந்த சங்கத்தின் பரிபாலகர்

தி. தா. தண்டாங்கூரை மிராஸ்தார் ஸ்ரீமாந்

**கு. ஆதிநாராயணபிள்ளை அவர்களால்**

மதுரை

விவேகபாநு அச்சியந்திரசாலையில்

பதிப்பிடப் பெற்றது.

1915.

உ

கணபதி துணை.

# சிவபிரான் கருணையுஞ் சீவர்கள் கடமையும்.

(இது, பூவாளூர்ச் சைவ சித்தாந்த சங்கத்தின் ஐந்தாம் வருட நிறைவுக் கொண்டாட்ட காலமாகிய 7-3-15-ல் சென்னைப் பிரஸிடென்ஸிக் காலேஜ் தமிழ்ப்பண்டிதர் மஹாமஹோபாத்தியாய ப்ருஹ்மஸ்ரீ வே. சாமிநாதையரவர்கள் அக்கிராசனத்திற் கூடிய வித்துவான்களும் பிரபுக்களும் நிறைந்த மஹாசங்கத்தில் மகிபாலன் பட்டி வித்துவான் ஸ்ரீ மு. கதிரேசச் செட்டியாரவர்களால் உபந்யாஸஞ் செய்யப்பெற்றது)

அறிவிற்சிறந்து விளங்கு மாட்சிமிக்க அக்கிராசனாதிபதியவர்களே!
இவ்வவைக்கண் விளங்கும் அன்புமிக்க ஆன்றோர்களே!

பெரியோர்களாகிய நுங்கள் அன்புரிமைசான்ற ஆணையைக் கடக்க வஞ்சி யொல்லும் வகையான்மேற்கொள்ள விரும்பியும், திருவருட்டுணைகொண்டும் இப்பொழுது செயக்கடவதாகிய என் கடமையை நிறைவேற்றத் துணிகின்றேன்.

யான் மேற்கொண்ட "சிவபிரான் கருணையுஞ் சீவர்கள் கடமையும்" என்னும் இவ்விஷயத்தை விரித்துக் கூறற்கு இடந்தருந் தேவாரத் திருப்பாசுரம் வருமாறு:—

நன்கடம்பனைப் பெற்றவள் பங்கினன்
றென்கடம்பைத் திருக்கரக் கோயிலான்
றன்கடன்னடி யேனையுந் தாங்குதல்
என்கடன்பணி செய்து கிடப்பதே.

இப்பாசுரத்தின் அருளொலியும் பொருளுமே இவ்விஷயத்தை விளக்கற் குதவியாயின வென்பதை யிறுதியிற் கூறப்படுந்தொகை யுரைக்கண்முடித்துக் காட்டுவேன்.

பேரியோர்களே!

மறையாகமங்களானும், அவற்றின் முடிவு நூல்களானும் பொ
துவாகவுஞ் சிறப்பாகவும் விளக்கப்பட்ட பதிப்பொருள் சிவபிரானே
யென்பது அந்நூல்களைச் செவ்விதினாராயு நுண்ணறிஞர்க்கெல்
லாம் ஒத்ததொன்றும். இப்பதிப்பொருளைக் கடவுண் முதலிய
பொதுப்பெயர்களான் வேதநெறியொழுகும் எல்லாச்சமயத்தார்
களும், சிவன் முதலிய சிறப்புப்பெயர்களாற் சமயாதீதமாகிய சைவ
நெறிநிற்போருங் கூறுப. கடவுள் என்னும் சொற்குப் பொருள்
கடந்தவரென்பதாம். எவற்றைக் கடந்தவரெனின், சுட்டியறியப்
படுங் காரிய ரூபப்பிரபஞ்சத்தையும், அதனாற் றத்துவ தாத்துவிக
ங்களையுங் கடந்தவரென்க. இப்பொருள் ஏனைய தேவர்களுக்கு
உண்மையிற் பொருந்தாதென்பது, அன்னார் சிவாகமங்களுட் கூறப்
படுமுப்பத்தாறு தத்துவங்களுக் குட்பட்டவர்களாதலானும், பேரா
ற்றலுடைய சிவபிரானியக்கத்தான் ஒவ்வோரதிகாரங்களைப் பற்றி
நிற்பவராகலானுமாம். மற்றைச்சமய நூல்கள் போலாது சைவ
சமயத்திற்குறைவின்றிக் கூறப்படுந் தத்துவங்கள் முப்பத்தாறும்.
அவற்றைக்கடந்து நிற்பவர் பரம்பொருளாகிய சிவபிரான் ஒருவரே
யாவர். இம்முப்பத்தாறு தத்துவங்களு முப்பகுதியினவாம். அவ
ற்றுள், தொடக்கப்பகுதியாகிய ஆன்மதத்துவ விரியுள் ஒவ்வொ
ன்றே ஏனைய சமயக்கடவுளர்களின் நிலயமாகும். ஆதலிற் கட
வுண் முதலிய சொற்களும் உண்மையிற் சிவபிரானையும் உபசாரத்
தான் மற்றைத் தேவர்களையுங் கூறுவனவாம். இங்ஙனமே வட
மொழிக்கட் கூறப்படும் பிரமசப்த முதலியவை உண்மையிற் சிவபி
ரானையும் உபசாரத்தாற் பிறதேவர்களையுங் குறிப்பிடும் பொருளு
டைய வென்பது, சுவேதா சுவதரம், கைவல்லியம் முதலிய உபநிடதங்க
ளானும், அவற்றை விரித்து விளக்கிய வாயுசங்கிதை முதலிய புரா
ணங்களானும் நன்குணரலாம். இன்னும் இவ்விஷயமாக வேதாக
மாந்தங்களை நிலைகண்டுணர்ந்த நீலகண்டவாசிரியர், அரதத்தாசாரி
யர், அப்பயதீக்ஷிதர் முதலிய சைவப்பெரியோர்கள் சிறிதும் ஐய
மின்றி ஆராய்ந்துரைத்தருளிய அரிய வடநூல்களானுந் தெளிய
லாம். பிரபஞ்ச நிகழ்ச்சியினிமித்தம் ஒவ்வொரு தேவர்களையும்
அதிட்டித்து நின்று சிவபிரான் ஒருவரே சிருட்டியாதி யருட்டொ

6841C (6184)

ழில்களைப் புரிவர். அதனாலன்றே,

"𑌶𑌿𑌵𑍋 𑌮𑌹𑍇𑌶𑍍𑌵𑌰𑌶𑍍𑌚𑍈𑌵 𑌰𑍁𑌦𑍍𑌰𑍋 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌃 𑌪𑌿𑌤𑌾𑌮𑌹𑌃।
𑌸𑌂𑌸𑌾𑌰𑌵𑍈𑌦𑍍𑌯𑌃 𑌸𑌰𑍍𑌵𑌜𑍍𑌞𑌃 𑌪𑌰𑌮𑌾𑌤𑍍𑌮𑍇𑌤𑌿 𑌮𑍁𑌖𑍍𑌯𑌤𑌃।
𑌨𑌾𑌮𑌾𑌷𑍍𑌟𑌕𑌮𑌿𑌦𑌂 𑌨𑌿𑌤𑍍𑌯𑌂 𑌶𑌿𑌵𑌸𑍍𑌯 𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌾𑌦𑌕𑌮𑍍॥" என்று வாயுசங்கிதை கூறியாங்கு தொழிலதிகாரிலயராகிய மூக்கியதேவர்களின் பெயர்களெல்லாஞ் சிவபிரானுக்குப் பொருந்தின. சிவனென்னும் வாசகமோ "சிவனெனு நாமந்தனக்கேயுடைய செம்மேனி யெம்மான்" என்றுந் தமிழ்வேதத்தான் ஏனையோர்க்குச் சொல்லாதென்பது போதரும். இதனாற் சிவபிரானுக்குள்ள முழுமுதன்மை வேறு தேவர்களுக்கின்றென்பது முணர்க. இங்ஙனமின்றி நித்தியமங்களார்த்த வாசகமாகிய இச்சிவசப்தத்தை பிறசமயத்தார் தஞ்சமய தெய்வங்களுக்குக் கூறிக்கொள்ளின், அஃது அங்வர்த்த நாமமாகப் பொருந்தாதென்பதுண்மை யெனினும், நம் சிவபிரான் மாட்டு அமைந்துகிடக்கும் உயர் நலங்களை அன்னாரையவ்வாறு கூறச்செய்தன வென்றும், அதனாற் சைவ மக்களாகிய நம்மனோர்க்குப் பெருமையே யென்றும் நினைந்து மகிழ்வேமாக. இத்துணையும் ஒருவாறு சுருக்கியுரைத்த சிவபரத்துவ விஷயம் தனியான ஓரரிய உபந்யாசமாக விளக்கவேண்டியதொன்றாகலின், இதனை நிறுத்தி மேல் இப்பெருமான் கருணைத்திறத்தைச் சிறிது கூறுவேன்.

## (க) கருணையினிலக்கணம்.

கருணை, தயை, இரக்கம், அருள் என்பன ஒருபொருட்சொற்கள். இது:—பரமபதியாகிய சிவபிரானுக்குரிய குணங்கள் எட்டனுள் முக்கியமான தொன்றாகும். இதுவே, அப்பெருமானிடத்து அளுப்த சக்தி, அல்லது பேரருளுடைமை யென்று சொல்லப்படும். இக்கருணைக் குணத்தின் இலக்கணமாவது, ஒருவர் தமக்குரியாரை நோக்கி இவர் எமது தந்தையார்; இவர் எமது தாயார்; இவர்கள் எம் உடன்பிறப்பாளர்; இவர்கள் எம்உறவினர்; இவள் எமது மனைக்கிழத்தி; இவர்கள் எம்புதல்வர்கள் என்றின்னோரன்ன தொடர்பு பற்றி மேற்கொள்ளும் அன்புபோலாது எல்லாவுயிர்கண் மாட்டும் இயல்பாக நிகழ்கின்ற அருளேயாகும். இவ்வுயர்குணம் நம்மனோர்க்கு ஒருசிறிது வாய்க்குமாயின், அது தொடர்பு பற்றியெழும் அன்

பின் முதிர்ச்சியா னுண்டாயதென் றறிதல்வேண்டும். இது கருதியே "அருளென் னுமன்பீன்குழவி" யென்றார் திருவள்ளுவ தேவரும். இவ்விடத்துத் திருத்தொண்டர் புராணத் திருப்பாட்டினிமையை ஒன்றனைப் புலப்படுத்தி மகிழாமலிருக்கக் கூடவில்லை யாதலின், அதனையுஞ் சிறிதுகாட்டுத லவசியமாகின்றது. திருஞானசம்பந்த சுவாமிகளும், திருநாவுக்கரசு சுவாமிகளும் சீகாழியில் திருத்தோணியப்பரையும், அம்மையாரையுந் தரிசிப்பான் செல்லுங்கால் அவ்விருவர்களும் ஒருங்குக் கூடிச்செல்லுந் திப்பிய காட்சியை நூலாசிரியராகிய சேக்கிழார் சுவாமிகள், தம்மனத்தின்கண், தியானமுகமாக எழுதிப் பார்த்துப்பார்த்து மகிழ்ந்தின்புற்று, அம்மகிழ்ச்சி யின்பங்களை நம்மனோருஞ் சிறிது பெற்றுய்யுமாறு, தாந்துய்க்கும் இன்பம்பொங்கி வெளிப்படுதல்போல ஓரருமைப் பாசுரத்தை யருளியிருக்கின்றார்கள். அப்பாசுரத்தின் கருத்து, அந்நாயன்மார்க ளிருவர்களது ஒன்றுபட்ட தோற்றத்துக்கு ஒப்புக் கூறுவதேயாகும்.

அது வருமாறு:—

"அருட்பெருகு தனிக்கடலு முலகுக் கெல்லா மன்புசெறி கடலுமா மெனவு மோங்கும், பொருட்சமய முதற்சைவ நெறிதான் பெற்ற புண்ணியக்கண் ணிரண்டெனவும் புவன முய்ய, இருட்கடுவுண் டவரருளு முலகமெல்லா மீன்றாடன் றிருவருளு மெனவுங் கூடித், தெருட்கலைஞா னக்கன்று மரசுஞ் சென்று செஞ்சடைவா னவர்கோயில் சேர்ந்தா ரன்றே" என்பதே.

இதன்கட் கூறப்பட்ட வுவமைகளையன்றி வேறு எத்துணை நீண்டு நினைப்பினும் "உயர்ந்ததன் மேற்றே யுள்ளுங்காலை" யென்னும் உவமவிலக்கணத்துக்கு மாறுபாடின்றி யீண்டுக்கூறத்தக்கது யாதுளது? என்னே இவ்வுவமைகளின் அருமைநயங்கள்! இங்ஙனங் கூறுதலன்றே ஆன்ற அருட்கவிகளினியற்கை. இப்பாசுரத்தினரும் பொருள்களை முற்றக்கூறினீண்டு விரியுமாதலின், இயைபுடைய முதலடியின் பொருளைமாத்திரஞ் சுருக்கிக் கூறுவேன். இதனிறுதியடியில் "தெருட்கலை ஞானக்கன்று மரசும்" என்று கூறுவதால் நிரனிறையாகப் பொருள்கொள்ளுதல் வேண்டும். அங்ஙனங்கொள்

ளுங்கால் அருட்பெருந் தனிக்கடல் திருஞானசம்பந்த சுவாமிகளும், அன்புநெறிகடல் திருநாவுக்கரசு சுவாமிகளுமாவார். இவ்விருவரிடத்தும் அருள் அன்பு என்னும் இருகுணங்களுமுளவெனினும் அவற்றுளாம் பயனை நோக்கி விசேடமாக ஆராயுங்கால் அப்பர் சுவாமிகள், சிவபிரானும், சிவனடியார்களுமே தமக்குரியவர்களாகக்கொண்டு அன்பு செய்தமையானும், தாதமார்க்கத்தில் வெளிப்பட நின்று ஒழுகியமையானும், அம்மார்க்க ஒழுக்கத்துக்குத் தலைவன் ஒருவனை மேற்கொண்டு அன்பு செய்தலே முக்கியமாதலானும், அவர்களிடத்துள்ள அருட்குணத்தினும் அன்பேயாவர்க்கும் வெளிப்படக் காணபபடலான், அவர்களையன்புக்கடலென்றும், திருஞான சம்பந்தசுவாமிகளிடத்து இவ் அன்புளதெனினும் அவர்கள் சற்புத்திர மார்க்கத்தில் வெளிப்பட ஒழுகியமையானும், இறைவன்குணம் அருளேயாதலானும், சுவாமிகளிடத்து எல்லாவுயிர்கண் மேலும் இயல்பாக எழுங்கருணையே மேலிட்டிருந்தமையானும், திருப்பெருமணநல்லூரில், தந் திருமணக் கோலத்தைத் தரிசிக்க வந்திருந்த பக்குவாபக்குவர்களாகிய வெல்லோர்க்கும் அக்கணத்திலேயே ஸம்ஸ்கார பூர்வகமாகக் கொள்ளைகொள்ள வீடுதவிக் கூற்றைப்பிடர்பிடித்துத் தள்ளித் தம் அருட்குணப்பயனைக் காட்டியமையானும் அவர்களையருட்கடலென்றுந் திருவாய் மலர்ந்தருளினார் ஆசிரியர் சேக்கிழார் சுவாமிகள்.

ஈண்டு இன்புறத்தக்க தோரியைபென்னையெனின்; அன்பினுலருளுண்டாவது பற்றி அன்பு அப்பனும், அருள் பிள்ளையுமாகும். அம்முறையே அன்புக்கடலாகிய நாவரையரை அப்பரெனவும், அருட்கடலாகிய சம்பந்தரைப் பிள்ளையாரெனவும் பெரியார் பாராட்டி வழங்குதலேயாம். அந்நாயன்மார்பாற்கருணையின்மைக்குச் சரிதங்காட்டிப் பேசுவாருஞ் சிலருளராலோவெனின்; அன்னார் கூற்று சிவபிரான் கருணையைப் பாகுபாடுசெய்து கூறுங்காற் சொல்லப்படுஞ் சங்கோத்தரங்களாற் சிறிதும் பொருந்தாமையுணரலாம். இவ்வளவிற் கருணையின் இலக்கணம் ஒருவாறு சுருக்கிக் கூறப்பட்டது.

## (உ) சிவபிரானே கருணையைமுழுதும் ஆளுதற்குரியர்

இனி, இக்கருணையை முற்றும் ஆளுதற்குரியர் சிவபிரான் ஒருவரே யாவரென்பதைப்பற்றிக் கூறுவேன். "அருளொடு மன்பொடும் வாராப் பொருளாக்கம், புல்லார் புரளவிடல்" என்னுந்திருக்குறளால், அருள் உயர்ந்தோர் தம்மிற்றாழ்ந்தோரிடத்தும், அன்பு தாழ்ந்தோர் தம்மின் உயர்ந்தோரிடத்தும் செய்யுங் குணங்களாமென்பது வெளியாம். இச்சிறப்பிலக்கணப்படி எல்லாவுலகத்துமுள்ள எல்லாவுயிர்களிடத்தும் ஒருங்கே கருணைசெய்தல் எல்லாம் வல்ல சிவபிரான் ஒருவர்க்கே கூடுமன்றிப் பிறதேவர்களுக்கின்றாம். வேறு தேவர்களு மக்களுட் சிறந்தார் சிலரும் இவ்வருட் குணத்தையுடையராய்க் காட்டிய சரிதங்களுமுளவே யெனின்; அம்மக்கடேவர்கள் யாவருக்கும், ஒவ்வோர்சமயங்களிற் றம்மிற்றாழ்ந்தாரிடத்துக்கருணை நிகழுமாயினும், தமக்கெல்லாமுயர்ந்தாராகிய சிவபிரான் ஒருவரிருத்தலான், அவரிடத்து அன்பேயன்றி அருள் செய்தற்கியைபின்மையானும், சிவபிரான் எவராலும் விலக்குதற்கொண்ணாத பாற்கடற்கண் எழுந்த விடத்தைப் பானஞ் செய்து யாவர்க்குந் தாந்தலைவரென்பதையும், யாவரிடத்துங் கருணைசெய்யத்தக்கவரென்பதையுங் காட்டினமையானும் கருணையின் முழுவிலக்கணமும் ஏனையோரிடத்தன்றிச் சிவபிரான் பக்கலிருப்பதையுணரலாம்.

"இவ்வருட்குணத்தின் பகுதியாகிய கண்ணோட்டத்தைப் பற்றியெழுந்த "பெயக்கண்டு நஞ்சுண் டமைவர் நயத்தக்க, நாகரிகம் வேண்டு பவர்" என்னுந்திருக்குறளினும் சிவபிரான் விடமுண்டசரிதங் குறிப்பிடத்தக்கதொன்றாம். சிபி, ததீசிமுதலியோர் சரிதக் குறிப்புக்களைச் சில குறள்களிற் கண்டு உரைக்கட்காட்டிய ஆசிரியர் பரிமேலழகர் இதனையுமீண்டுக் காட்டியிருப்பின் மிக நன்றாகும். இறைவனுக்கு எல்லாஞ்செய்யும் ஆற்றல் இயற்கையென்றெழுந்தார் போலும். சிவபிரான்றலைமையும், அவர்கருணைத்திறமும் ஸ்ரீமாணிக்கவாசகசுவாமிகள், தாம் அநுபவித்துத் திருவாய் மலர்ந்தருளிய திருவாக்குக்களிற் பரக்கக்காணலாம். "தன்மைபிறரா லறியாத தலைவா" என்பது தலைமை பற்றியதாகும். தலைவர்களை யுலகத்தலைவரெனவுங் கடவுட்டலைவரெனவும் இருவகையாகக் கொள்ளலாம்.

இவ்விருவர்களுக்குமுள்ள பேதத்தை நம்சுவாமிகள் யாவரும் வியந்கின்புறுமாறு மிக அழகுபெறக்கூறியிருக்கின்றார்கள். எங்ஙனமெனின்; உலகத்தலைவர்களாகிய அரசர் முதலியோரை யுலகத்துள்ள மற்றையோரெல்லாம் நன்கு தெரிவர்; அத்தலைவர்களின் குணஞ்செயல்களையும் வரையறுத்துணர்வர். அத்தலைவர்கள், பிறரெல்லாரையும் அறியார்; அன்னார் குணஞ்செயல்களையு நன்குதெரியார். கடவுட்டலைவராகிய சிவபிரானோவெனின்; பிறரெல்லாரையும் அன்னார்குணஞ்செயல்களையும் "அவனன்றி யோரணுவுமசையா" தென்றபடியுயிர்க்குயிராய் நின்று நன்குணர்வர். பிறர்க்கு அப்பெருமான் பெற்றியுணரவரிதாகும். இப்பொருணலங்களையே நமது சுவாமிகள், மேற்காட்டியபடியும், "பெற்றிபிறர்க்கரிய பெம்மான்" எனவும் அருளிச் செய்வாராயினர். "குறைவிலாநிறைவே" யென்பது, அப்பெருமான் கருணையைப்பற்றியதாகும். சிவபிரான், தங்கருணையைப்பிறரெத்துணையள்ளிக்கொண்டாலும் குறைவின்றி நிரம்பியிருப்பரென்பதாம். இவ்விருவிஷயத்தையும் "தெள்ளிப்பிறராற் றெரிவரியான்றன்கருணை, யள்ளக் குறைபாவரன்" என்பதனானும் நன்குணரலாம். இதனால், தங்கருணையைக் கொள்ளாவிட்டாற்குறைவரேயன்றிக் கொள்ளக்குறையாரென்பதும் வெளியாதல் உய்த்துணர்க. எவ்வுயிர்க்கும் இரங்கி, அவற்றிற்குவரும் இடையூற்றையொழித்து இன்பளித்தல் சிவபிரான் ஒருவர்க்கே கூடுமென்பதும், மற்றையோர்க்கியன்றவரை கருணைசெய்தலே கூடுமென்பதும் ஆன்றோர் துணிபாகும் இதுகருதியே அருளைப்பற்றித் திருமூல தேவர் கூறுமிடத்து

"ஆருயிர் யாதொன் றிடருறு மாங்கதற்
கோருயிர் போல வுருகி யுயக்கொள்ள
நேரி னதுமுடி யாதெனி னெஞ்சகத்
தீர முடைமை யருளி னியல்பே"

என்று மற்றையோர்க்கியன்றவாறு "முடியாதெனி னீரமுடைமை யருளினியல்பே" எனக்கட்டளையிட்டருளினார்.

சிவபிரானுக்கு முடியாத தொன்றின்மையின், அவரே கருணையை முழுவிலக்கணத்துடன் ஆளுந்தகுதியினரென்பது வெள்ளி

டைமலே யெனவுணரத் தக்கதொன்றும். இன்னும் இவ்வுண்மை யை ஶிவோஹா என்னுமந்திரமும் வலியுறுத்தும். சகலதே வர் மக்கள் முதலிய யாவர்க்கும் எவற்றுக்கும் ஈயுந்தாதா சிவபிரா னே யாவரென்பது, எஜுர் வேதத்துள்ள சமகமந்திரங்கள், திரு மால் பிரமன் முதலிய தேவர்களை அன்னத்தோடு சேர்த்து ஈயப்ப டும் பொருளாகக் கூறினமையானும், சிவபிரானை யங்ஙனங் கூறு மையானு நன்குணரலாம். யாவருந் தப்பா விரக்கத் தாம் வேண்டி யார் வேண்டியாங்கியும் பெருங் கொடையாளியாதலின், இப்பெரு மானை, கருணையென்னும் உயர்குணத்தின் முழுப்பாகத்தையும் உடையாரென்பது தேற்றமாம்.

## (௩) சிவபிரான் கருணையின் சிறப்பு.

இனி, நம் பெருமானுக்குரிய எண்வகைக் குணங்களுட் கரு ணையும் ஒன்றெனினும், இக்குணமே, நாமெல்லாம் வழிபட்டுய்தற் குரிய திருமேனியை இறைவன் கோடற்குரியதாக விருத்தலின் மிக ச்சிறந்ததாகும். சிவபிரான் உண்மைச் சொரூப விலக்கணம் "செ றிசிவ மிரண்டு மின்றிச் சித்தொடு சத்தாய் நிற்கும்" என்றபடிசச் சிதாநந்தப் பிழம்பேயாகும். இந்நிலை மலபத்தர்களாகிய ஆன்மாக் களுணரவரியதாகலின், அவ்வான்மாக்களின் பொருட்டு இறைவன் அருவம், உருவம், அருவுருவம் என்னு மூவகைத் திருமேனியுமு டையராய் வெளிப்பட்டருளுவர். இதுவே தடத்த நிலையெனப்ப டும். இத்திருமேனிகள் கருணையாற் கொண்டனவேயாம். இவ் விருவகை நிலையும் இறைவனுக்குரிய வென்பதையும், கருணையே வடிவ மென்பதையும், "கற்பனை கடந்த சோதி கருணையே வடிவமாகி" யெனவும், "செப்பிய மூன்றுநந்தங், கருமேனி கழிக்க வந்த கருணையின் வடிவு தானே" எனவும் போந்த திருவாக்குக்க ளானறிக. ஈண்டு இக்கருணையே தமது வாமபாகம் பிரியாதுடனு றைந்து விளங்கும் உமாதேவியாகிய சிவசக்தியாகும். இஃது "அரு ளது சக்தி யாகு மரன்றனக்கு" என்பதனுனறிக. தமக்கமைந்த எண்வகைக் குணங்களுள், இவ்வருட் குணமே நம்பிரானுக்குரிய பராசக்தியாக வமையுமாயின், இதன் மாட்சியை எவ்வாறு பேசு வேன்! நம் பெருமானது இப்பேரருள்வெளிக்கண்ணே, எல்லா

அண்டங்களும், அவற்றினுட்பொருள்களுந்தோன்றி நிலைபெறுவனவாம். இவ்வருள் வெளிக்கண் எல்லாவுயிரும் நிலை பெற்றிருக்கும் "வெள்ளத்து ணாவற்றி யாங்குன் னருள்பெற்றுத் துன்பத்தின்றும் விள்ளக்கில் லேனை" என்ற திருவாக்கின்படி நாம் நம் வினைப்பகுதியான் அக்கருணையினாற் பெறவேண்டிய பயனைப் பெறாது மாழ்குகின்றோம். இக்குற்ற நம்மதேயன்றி யக்கருணாநிதியின் பாலதன்று. தாழ்ந்தநிலம் மேட்டுநிலமென்னும் வேறுபாடு கருதாது மேகம் நிரந்தரமாகப் பெய்யும், அந்நீரை மேட்டுநிலமேற்காது ஒதுக்கத்தாழ்வுநிலம் ஏற்குமாபோல, சிவபிரான் பருகற்கினிய பரங்கருணைத் தடங்கடலாகவிருக்கும், நந்தீயவினையாகியவணை குறுக்கிட்டுக் கிடத்தலான், அக்கருணைப் பிரவாகம் நம்பாற் செல்லாது உண்மை யன்பர் கூட்டமாகிய நற்றடத்திற் சென்று நிறைகின்றது. சிவபிரான் ஆன்மாக்களுய்தற் பொருட்டுத் தங்கருணையமுதத்தை மிகவலிந்து எத்துணையோ உபாயங்களாலும், ஊட்டுகின்றார். இவ்வுண்மையை சுவாநுபூதியானுணர்ந்த பேரன்பாளராகிய ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள் கட்டளையிட்டருளிய பின்வரும் திருவாசகத் திருப்பாசுரத்தானு முணரலாம்.

அதுவருமாறு:—

"வழங்குகின் றாய்க்குன் னருளா ரமுதத்தை வாரிக்கொண்டு
விழுங்குகின் றேன்விக்கி னேன்வினை யேனென் விதியின்மையாற்
றழங்கருந் தேனன்ன தண்ணீர் பருகத்தந் துய்யக்கொள்ளா
யழுங்குகின் றேனுடை யாயடி யேனுன் னடைக்கலமே"

என்பதே.

இதன் அருமைப் பொருளையுஞ் சிறிது கூறிமேற் சொல்வேன். வழங்குகின்றாய்க்கு என்புழி, குவ்வுருபு பொருட்டுப் பொருளதாம். "என்னையாண்டாய்க்கு" என்று பிறாண்டுஞ் சுவாமிகள் இதனைவெளிப்படக் கூறுவர். ஆகவே, வழங்குகின்ற நின்பொருட்டு நின் அருளாகியவாரமுதத்தை வாரிக்கொண்டு விழுங்குகின்றேன் என்பதே யத்தொடரின் பொருளாம். ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள் தம்மைச் சிவபிரான் மிகவலிந்து அடிமை கொண்டாரென்பதை "கல்லைமென் கனியாக்கும் விச்சை கொண்டென்னை நின்கழற் கன்ப

ளுக்கினே" யெனவும், "ஈர்த்தென்னை யாட்கொண்ட வெந்தை பெரு மானே" யெனவும், "கல்லைப் பிசைந்து கனியாக்கித் தன்கருணை, வெள்ளத் தழுத்தி வினைகடிந்த வேதியனை" யெனவும், "இனையனு னென்றுன்னை யறிவித்தென்னை யாட்கொண் டெம்பிரானுனுய்க்கு" எனவும் போந்த திருவாக்குக்களானுணர்க. அவ்வாறு அடிமை கொண்டு தங்கருணை யமுதத்தை யெவ்வா றூட்டினுரெனின்; ஒன் றுமறியாக் குழவிப் பருவத்து மகவைத் தாய் அச்சமுறுத்தியுணவூ ட்டுமா போலும், கல்லூரிக்கட்சென்று கல்வியின் மாட்சியுணராது கற்றற்கு மலைவுறும் சிறுரை யாசிரியன் அடித்துத் துன்புறுத்திக் கல்வியைப் புகட்டுமா போலும் ஊட்டினுரென்க.

இவ்வுண்மையையே நம் சுவாமிகள் "அடித்தடித்து வக்கார முன்றீற்றிய வற்புதமறியேனே" என்று திருவாய் மலர்ந்தருளினுர் கள். ஆதலின், "சர்க்கரை வழங்குதல்" என்பது போலச் சிறி தும் வருத்துதலின்றி மகிழ்ச்சிமிக்கு இடையீடின்றிப் பெய்தல் கரு திக், கொடுத்தல் தருதல் முதலிய சொற்களை விடுத்து வழங்குதற் சொல்லாற்றெறுத்து, அவ்வாறு கருணையமுதத்தைப் பெய்து உண் ணுக உண்ணுகவென்று அடிந்தடித்து வற்புறுத்துகின்ற நின்பொ ருட்டு அஞ்சியென்பார் வழங்குகின்றுய்க்கு எனவும் தன்னையுண் டாரைச் சிற்றின்புறுத்துந் தேவரமுதம் போலாது சிவபிரானருள முதம் பேரின்புறுத்த வல்லதாகலின் உன்னரு ளாரமுதத்தையென வும், இயற்கையாக வுண்டலின்றித் துன்புறுத்து நின்பொருட்டுமிக விரைந்துண்ணுகின்றேனென்பார் வாரிக்கோண்டே விழுங்குகின்றே னெனவும், அங்ஙனம் விரைந்து விழுங்குதலான் "விக்கினேனென வும், வேண்டாத வுணவையுண்டற்குத் தொடங்கு முன்னர்க் கண் டவளவிலேயே விக்கலுண்டாமாகலின், முறையே நிகழ்காலமுமிற ந்த காலமுந் தோன்ற விழுங்குகின்றேன்விக்கினேனெனவும் அவ்வா றுவிக்குதற்குக் காரண நீயல்லை; வினைவயப்பட்டுழலும் எனது விதி யேயென்பார் வினையேனென் விதியின்மையால் எனவும், யான் வேண்டாதிருப்பவும், என்னைத் துன்புறுத்தி யூட்டினையாதலின், அதனுலுண்டான விக்கலை யொழித்தற்குத் தண்ணீர் தந்து பிழை ப்பித்தல் வேண்டுமென்பார் " தண்ணீர் பருகத்தந்துய்யக் கோள் ளாயெனவும், அவ்வமுதம் நின்னருளமுத மாதலின், அதனையுண்

னுதற்குரிய அதிகார சிவத்துவம் வேண்டுமென்பார் தண்ணியநீர்மை—சிவத்துவம் என்னும் பொருள் பொதுளத் தண்ணீரெனவும் அத்தண்ணீரும் அவ்வமுதம்போல் விக்கல் முதலிய சலனங்களைத் தருதலின்றி யெற்குநந்த இனிமைச் சுவையுடனிருத்தல் வேண்டுமென்பார். "தழங்கருந் தேனன்ன தண்ணீரெனவும், அது பெருமையின் மிக வருந்துகின்றே னென்பார் அழுங்குகின்றேனெனவும், சிவபிரான் சேதனப் பொருள்களெல்லாம் தமக்கு அடிமையாகத் தாம் ஆண்டான் எனவும், அசேதனப்பொருள்களெல்லாம் உடைமையாகத் தாம் உடையானெனவுங் கூறப்படுவாராதலின், இந்நான்கு சொற்களைக் கொண்டு விளக்குதற்குரிய விஷயம் முன்னிலை தன்மையாகிய இருசொற்களினமைய உடையா யடியே னெனவும், யான் சேதனனாயிருந்துஞ் சிறிதும் அன்பிலனாதலின், என்னையாளுதல் பற்றிவரும் ஆண்டானென்பதினும், அசேதனப் பொருள்களைப்பற்றிய உடையானென்பது நினக்குப் பெருமையாதலின் அதனையே விளிப்பலென்பார் உடையாயெனவும், ஆண்டானென்ப துண்மையெனினும் என்னை நோக்கியவ்வாறு கூறற்கு நாணமுடையேனாதலின் அப்பொருள் பிறரறிய வென்னையே கூறிக்கொள்வலென்பார் அடியேனெனவும் நின்றனக்குரிமையுடைய பொருளினும், அடைக்கலப்பொருளைக் காத்தல் நின்பெருந்தன்மைக்கு இயன்றதென்பார் உன்னடைக்கலமே யெனவுந் திருவாய் மலர்ந்தருளினார் சுவாமிகள். நண்பர்களே! இவ்வரிய நுண்பொருளை நினையுங் கால் திருவாசகமாட்சி சிந்தித்தற்கெவ்வாறு ஒல்லும்? இவ்வருமை நூலுக்கு உரை வரைவேனென்று முற்பட்டார் சிலர் இதன் நுண்பொருணலங்களைப் பிறரறியக் கூடாவாறு செய்தமை பெரிதும் வருந்தத் தக்கதே. இன்னும் நம் இறைவன் அன்பர்களை யாட்கொள்ள மேற்கொண்ட செயல்களெண்ணத் தொலையா. அவர் தம் அன்பர்களுக்கு எவ்வளவு எளியநிலையிலுள்ளாரென்பது அச்செயல்களானறியலாம். நம் மணிவாசகர் பொருட்டு மண் சுமந்தார். "மண்முதற் சிவமிறுகிய முப்பத்தாறு தத்துவங்களையுங் கடந்தவன் என்று என்னைக்கூறுவார்; யானோ என் உண்மையன்பர் பொருட்டேக்கீழ்க் கண்டபிருதிவி தத்துவத்தை அம்முப்பத்தாறினுமேல் நிற்கும் என்சிரமேலேற்றுங் கடப்பாடுடையேன்" என்று அவர் தாம் அடியார்க் கெளியராம் நிலை

மையை நன்கு புலப்படுத்தினார் போலும். என்னே அவர் பெருங் கருணை மாட்சி! நினையுங்கா லுள்ள முருகுகின்றதே!

### (௪) அக்கருணையின் வகை.

இனி, அப்பெருமான் கருணைத் திறம் இருவகைப்படும். அவை அறக்கருணை மறக்கருணை யென்பனவாம். ஒரு தந்தைக்குரிய இருவர் மக்களுள், ஒருவன், "தந்தை சொன்மிக்க மந்திரமில்லை" என்றபடி செவ்விய நன்னெறிக்கண் ஒழுகுகின்றான். அவற்குத் தந்தை வேண்டுவன தந்து இன்புறுத்துகின்றார். மற்றொருவன் தந்தையுரை கடந்து தீயநெறிக்கட் செல்லுங்கா லவனைத் தந்தையடித்துத் துன்புறுத்தி நன்னெறிக்கட் செலுத்துகின்றான். இவ்விருவர் மக்களிடத்துச்செய்யுமிவ்விரு செயலும் அன்புபற்றியனவேயாகும். இங்ஙனமே நம்பரமபதியின் செயலுமாம். தம்மிடத்து அன்புபூண்டு ஒழுகும் அடியார்களை யவருவப்பன செய்து இன்புறுத்துவர். அன்பின்றி யிருப்போரை யொறுத்து நன்னெறிக்கட் செல்லுமாறு அருள் பாலிப்பர்.

இவ்விரு செயற்கும் அவ்வான்மாக்களிடத்துத் தாம் வைத்த கருணையே காரணமாகும். இவற்றுள் முன்னையது அறக்கருணை யெனவும், பின்னையது மறக்கருணை யெனவுங் கூறப்படும். நம்சமய நூல்களையும் உலகியலையும் அறியார்சிலர் "யாவர்க்கும் ஒப்பவிருத்தலன்றே கடவுளியல், அவ்வாறின்றிச் சிலர்க்கு இதஞ்செய்தலும், சிலர்க்கு அகிதஞ் செய்தலும் என்னை?" யென்பர். இவ்வுலக பரிபாலனஞ் செய்யும் அரசியலை நோக்கினும் இவ்வுண்மை மிக வெளிதிலறியத் தக்கதொன்றாம். இது கருதியே திருவள்ளுவதேவரும் "அறத்திற்கே யன்புசார்பென்ப வறியார், மறத்திற்குமஃதே துணை" என்று கூறினர். இத்திருக்குறளுக்கு மறத்தை நீக்குதற்கும் என்று ஆசிரியர் பரிமேழலகர் உரை கூறினர். இதனினுஞ் செவ்வையாக அறத்தைச் செய்தற்கு அன்பு துணையாதல் போல ஏனை மறத்தைச் செய்தற்கும் அன்பு துணையாம் என்று கொண்டு இவ்விரண்டனுட் பின்னதைஅன்பு பற்றியமற மெனக் கோடல் சிறப்புடைத்தென்பதுணர்க. இங்ஙனமே நாயன்மார்கள் செயலுமாம், நம் வைதிக சைவசமய நெறியை யழிப்ப முற்பட்ட சமணர்கள் பாண்

டிபவாசனால் ஒறுக்கப்பட்டுக் கழுவேறுங்கால், அதனை விலக்காமையால் திருஞானசம்பந்த சுவாமிகள் கருணையிலரென்பர் ஒருசிலர். அன்னார், ஒருகுடி நலம்பெற வொருவனையும், ஓரூர் நலம்பெற ஒரு குடியையும், ஒரு தேயநலம்பெற ஓரூரையுங் கெடுத்துக் காத்தலறமாமென்று அறநூல் கூறுதலையு முணர்ந்திலர்; "பொறையெனப் படுவ தாடவர் தமக்குப்பூணெனப் புகலினும் பொருந்தார், முறையறப் புரிந்தா லக்கணத் தவர்த முடித்தலை துணிப்பதே முழுப்பூண்" என்னு நீதியையு முணர்ந்திலர். இன்னும் பல பிரபல நியாயங்களுள வெனினும், அவையீண்டு வேண்டற் பாலனவல்லவாதலின், விரித்திலம். ஆகவே, சிவபிரான் செயல்கள் "எக்கிரமத்தினு மிறைசெய லருளே யென்றும்" என்றாங்குக் கருணை காரணமாகவுள்ளனவேயாம்.

## (ரு) அக்கருணையா லான்மாவெய்தும் பயன்.

இனி, அப்பெருமான் கருணையானுண்டாம் பயனைச் சிறிது கூறுவல். ஆன்மாக்களநாதி கேவலத்தி லாணவமலத்தாற் பிணிப்புண்டு இருட்டறையிற் கிடக்கின்ற கண்ணிலாக்குழவிபோல நினைவு செயலற்றுக் கிடக்குங்கால் விவிதசக்திகளையுடைய அவ்வாணவமலத்தைக் கழுவுதற்பொருட்டுக் கன்மமல மாயாமலங்களை யவ்வவற்றிற் கேற்பப் பயனுறச்செய்து, சிறிது அறிவெழக்கண்டு, படைத்தன் முதலிய ஐந்தொழில்களையும் புரிந்து, இறுதியிற் றந்திருவடியின்பத்தை யீதற்குக்காரணம், தம்அளவிலாப் பெருங்கருணையேயாகும். இவ்வுண்மையை,

"அருளிற் பிறந்திட் டருளில் வளர்ந்திட்
டருளி லழிந்திளைப் பாறி மறைந்திட்
டருளான வானந்தத் தாரமு தூட்டி
யருளாலென் னந்தி யகம்புகுந் தானே"

என்னுந் திருமந்திரமும் வலியுறுத்துவதாம். இனி, அப்பெருமானைக் காண்டற்கும் அவர்கருணையே கண்ணுதல் வேண்டும். கேனோபநிடதத்தில் "இந்திரன் இயக்க வடிவத்துடன் வந்தபரம்பொருளாகிய சிவபிரானை ஆங்குத்தோன்றிய உமாதேவியாராகிய அருட்சக்தி

காட்டலாற் றெளிந்தான்" என்று கேட்கப்படுதலானும், "மெய்யருளாந் தாயுடன்சென்று பின்றாதையைக் கூடி" யென்று பட்டினத்தடிகள் அருளினமையானும், "அவனருளாலேயவன்றாள் வணங்கி" எனவும், அவனருளே கண்ணாகக்காணினல்லான்" எனவும்போந்த திருவாக்குக்களானும் இவ்வுண்மை நன்குபுலனாம். "ஆ[illegible]வனருளாற் பத்தி நன்குண்டாம்" என்றபடி இறைவனையடைதற்கு மிக முக்கியமான பத்தியும் அவனருள் வழியுண்டாமெனின்; வேறிதன் பயனை யெவ்வாறுரைப்பேன்! அப்பெருமான்பரங்கருணையின் பயனாக முடிவில் நாம்பெறத்தக்கபொருள் அப்பெருமானேயாகும. இதனினுஞ் சிறந்தபயன் யாதுளது? சிவநேசர்களே! இவ்வுலகத்தும் அவ்வுலகத்தும் விரைவிற் றோன்றியழிதன்மாலையவாகிய சிற்றின்பந்தரும் பொருள்களைப் போலாது நித்தியானந்தவுருவமாகிய அவ்விறைவனையே தருமாட்சிமிக்க அக்கருணையைப் பெறுதற்குரியசெயலையன்றி வேறியாம் செயக்கிடப்பதுயாதுளது? ஸ்ரீ மணிவாசகனாரும் "தந்ததுன் றன்னைக் கொண்டதென் றன்னைச் சங்கரா யார்கொலோ சதுரர், அந்தமொன் றில்லா வானந்தம் பெற்றேன் யாதுநீ பெறறதொன் றென்பால்" என்றுஇப்பேரானந்தப் பெருஞ்செல்வப் பேறு அவர் கருணையினாற்பெற்ற தம் அநுபவவுண்மையை நம்மனோரும் உய்யவெளிப்படுத்தி யருளினார்கள். இத்திருவாக்கில் ஒரு பண்டமாற்றுச்செய்தியை நாம்அறிகின்றோம். அஃதாவது, எல்லாவறிவும் எல்லாவாற்றலும் நிறைந்த மலரகிதராகிய சிவபிரான் தம்மைக் கொடுத்துச் சிற்றறிவுஞ் சிறுதொழிலுமுடைய சீவனை யதற்குமாறாகக் கொள்கின்றாரென்பதே. அப்பெருமானைப்பெற்றமையாற் சீவன் எய்திய பயன் அளப்பிலாவானந்தம். இச்சீவனால் அவ்விறைவன் பெற்றது யாதுமின்று. என்னேயவர்கருணைத்திறம்! மனத்தானினைத்தற்கும் வாயாற்பேசற்கும் அளவுபடுவதின்றாகலின், இம்மட்டிற்சிவபிரான் கருணையென்னும் பகுதியை நிறுத்தி மேற்சீவர்களின் கடமையைப்பற்றிச் சிறிது கூறுவேன்.

## (௯) சீவர்களின்றன்மை.

ஆன்மா எப்பொருளைச்சார்ந்ததோ அப்பொருளின் வண்ணமாந்தன்மையுடையதென்பது வேதாகம சித்தாந்தம். வெளி, இரு

ளோடு கூடுங்காலிருளாகவும், ஒளியொடு கூடுங்கால் ஒளியாகவும் ஆதல் போலவும், ஒருபளிங்கு, செந்நிறத்தைச் சார்ந்துழிச் செம்மையாகவும், கருநிறத்தைச் சார்ந்துழிக்கருமையாகவுந் தோன்றுதல் போலவும், ஆன்மா, மலவிருளிற்கலந்துழி அதன் மயமாகவும், சிவவிளக்கத்திற்பொருந்துழிச் சிவமயமாகவும் விளங்கும். அவ்வப் பொருளைச்சாருங்காற் பிரிப்பின்றியத்துவிதமாகவேசம்பந்தமுற்றுக் கலந்திருக்கும். மலத்தோடு சம்பந்தமுற்றுழியந்நிலையும் அத்துவிதநிலையாமோவெனின், அதுவும், ஒன்றென்றுவது வேறென்றுவது கூறப்படாமையின் அத்துவிதமேயாம். இதனை "ஆணவத்தோடத்துவிதமானபடிமெய்ஞ்ஞானத், தாணுவினோடத்துவிதஞ்சாருநாளெந்நாளோ" என்னுந்தாயுமானார் திருவாக்கும் வலியுறுத்தும், ஆகவே தனக்கெனவொரு சுதந்தரமுமின்றிச் சார்ச்சிப்பொருள்களின் றன்மையேதன்றன்மையாகக் கோடல்ஆன்மாவினிலக்கணங்களுண்முக்கியமானதொன்றும். இன்னும் இச்சீவன் சகசமலமாகிய ஆணவத்தாற் பிணிப்புண்டு அதனீக்கத்தின்பொருட்டு இறைவனாற்றரப்பட்ட மாயா மலகன்மமலங்களின் காரியங்களாகியதநுகரண புவனபோகங்களைப்பெற்று மாறி மாறிப் பிறக்குமியல்புடையதாம். மனம் புத்தியகங்காரஞ் சித்தமென்னும் அந்தக் கரணங்களாகிய கருவிகளாற் பொறிகளின் வாயிலாகப்புலன்களை நுகர்ந்து அதனான் மீண்டு மீண்டும் வந்தேறுகின்ற கன்மங்களையுடைத்தாம். இன்பந்தருவன வற்றில் விருப்பும், துன்பந்தருவனவற்றில் வெறுப்புமுடையதாகும். இன்னும் இவ்வான்மாவினிலக்கணம்,வகைவிரிகளாற் பல திறப்படும். அவை விரிந்த சைவநூல்களிற் காண்க.

## (எ) கடமையின் றன்மை.

இனி, கடமையாவது இன்னதெனச் சிறிது கூறுவேன். இவ்வுலகத்து அறிவுள்ள ஒவ்வொருவரும், நாம் செய்யவேண்டியவை யிவை யிவையென நூன்முகமாகவும், பெரியார் முகமாகவுமுணர்ந்து பிரதிப் பிரயோசனத்தைப் பற்றிச் சிந்தியாமன் மேற் கொள்ளுங்காரியங்களுள் இன்றியமையாது செய்யத்தக்கவை யெவையோ அவை கடமை யெனப்படும். நன்மாணாக்கனொருவன் ஆசிரியனை யுத்தல் கருதி வெறுப் புறாது அவனை வழி நின்று கற்றுவருத

னும் இக்கடமையேயாகும். போர்வீரனொருவன் போர் முனையிற் சென்றவுடன் தனக்கு வரும் வெற்றி கருதி முற்படலும், தோல்வி கருதிப் பிற்படலுஞ் செய்யாது நிலை நின்று பொருதலும் அவன் கடமையாகும். அற நூல்களில் நித்தியகருமாநுட்டானங்களைப் பற்றிக்கூறி, அவற்றைச் செய்தலால் வரும் பயனையும் விரித்துப்பின், இப்பயன்களையாராய்ந்தறிந்தே செய்தல் வேண்டுமென்று எவரும் கருதல் கூடாதெனவும், பிரதிதினமுஞ் செய்யவேண்டிய கன்மங்களைப் பயன் விசாரியாதே செய்து தீரவேண்டுமெனவும், அங்ஙனஞ் செய்தல் ஒவ்வொருவனுக்குங் கடமையாமெனவுங் கூறுதலு மீண்டுக்கருதற்பாலது. அறிவுவலியுடைக்கார் பயனை விசாரித்தல் மிக நன்றே. அஃதியலாதாயின, விசாரித்தறியும்வரை கன்மங்களைச் செய்யாதொழிதல் தவறென்பதே யீண்டுத்துணியற் பாலது. பயன், விசாரித்தலின்றிச் செய்யினும் செய்தாரைச் சாரதலொருதலை. வரையாது கொடுக்கும் வள்ளன்மையுடையோர், இவற்கு இன்னது செய்தல் வேண்டும், இதற்கின்னது செய்தல் வேண்டும் என்னும் நியதியின்றி நேர்ந்த நேர்ந்தபடி கொடுத்ததற்குக் காரணம் அவருள்ளத்திற் பதிந்து கிடக்குங் கொடைக் கடமையேயாகும். இது நோக்கியே, அவர் கொடைமடம் பட்டோரென்று கூறப்படுவர். முல்லைக்குத்தேரு மயிலுக்குப் போர்வையும் வேண்டாதனவாகவும், அப்பொருள்களினியற்கைத் தாழ் நிலைமைக்கண்டவுடன் மனநெகிழ்ந்து இரக்கமுற்று அவற்றிற்குப் பேரிடையூறுவந்ததாகக் கருதிப் பாரி முதலியோர் இயைபில்லாத் தேரும் போர்வையுமீந்தனரே. இவ்வீகை பயன் குறித்ததாமா? அவர் தமக்கு இயற்கையினமைந்து கிடக்குந்தண்ணளியோடு கூடிய கொடைக் கடமையேயன்றி வேறென் சொல்வது? முல்லைக்கொடி, படர்கொம்பின்றித்தளருமேல், தன் ஏவலாளரைக் கொண்டு தக்கதொரு கொழு கொம்பை நிறுத்தல் கூடாதா? அக்கொழு கொம்பினும் இத்தேரினு லக்கொடிக்குக் கிடைத்த விசேட நலம் யாதுளது? அங்ஙனமாகவும் தேரை யீந்ததற்குக் காரணம், பாரிவள்ளல் தேரேறி வருங்காற்கொடியின்றளர்நிலைமைக்கண்டதும் தனது இயற்கைத்தண்ணளியால் இன்னது செயற்பாலதென்றுணரும் அத்துணையுந் தாழ்க்கமனமின்றி அக்கணமே தேரைநிறுவினரென்பதே. இதனானன்றே,

"கொடுக்கிலாதானைப் பாரியே யென்று கூறினுங் கொடுப்பாரிலை" என்று நம் சுந்தரமூர்த்திசுவாமிகள் அவ்வள்ளலின் கொடைத்திறத்தைப்பாராட்டி யருளினார்கள். நம் மக்களெவ்வொருவருந் தந்தேயம், மொழி, சமய முதலியவற்றை யியன்றவரை பேணமுற்படலுந் தத்தங்கடமையாகும். இக்கடமை யுலகியற்கடமை சமயக்கடமையெனஇருவகைப்படும். அவற்றுளீண்டுக் கூறப்பட்டன சில வுலகியற்கடமைகளாம். இன்னும் இதுசம்பந்தமாகக் கூறப்புகின் மிகவிரியுமாதலின், எடுத்துக்கொண்ட விடயத்திற்கிசையுமாறு நம்சமயக் கடவுளாகிய சிவபிரான்மாட்டு நாம் செய்யவேண்டியவைகளை யிங்குக்கூறுவேன்.

## (அ) சிவபிரானிடத்துச் செய்யவேண்டிய கடமைகள்.

சைவர்களாகிய நாமெல்லாம் நம்சமயக்கடவுளாகிய சிவபிரானையுண்மையன்போடுவழிபடுதல்வேண்டும். அங்ஙனம்வழிபடுங்கால் ஏனைத்தெய்வங்களைப்பழித்தல் கூடாது. நந்தெய்வத்தையே போற்றுவோமாக. ஆயின், ஒருசாரார் எல்லாத்தெய்வங்களுமொன்றேயாதலின், அத்தெய்வங்களெல்லாவற்றையும் சமமாகக்கருதியன்பு செய்தல்வேண்டுமென்பார். அன்னார்கூற்று மரபுபிழைபட்டதொன்றாதலின், பொருந்தாமைகாட்டுதும். ஒவ்வொரு சமயத்தாருந் தத்தஞ் சமயக்கடவுளர்சிறப்பு வகையானும் பிறசமயக்கடவுளரை பொதுவகையானும் அன்புசெய்யலாமன்றிச் சமநிலையாக்கோடல் பத்தியின் இலக்கணமன்றாம். தெய்வங்களெல்லாம் உண்மைநிலையில முடிவிலொன்றேயெனினும் அவ்வுண்மை தத்துவஞானிகளுக்கன்றி மற்றையோர்க்குணரவரிதாம். சாமானியர்கள் அந்நிலையைப்பற்றிப் பேசல் பேச்சளவேயன்றி யநுபவவளவிற் கோடலரிது. எவ்விஷயமும் அநுபவத்தினன்றிப் பேச்சளவின்மொழிகள் பயனின்றாம். இன்னஇன்ன வொழுக்கங்கள் உத்தமமென்று பேசிவிட்டு அவற்றைக்கடைப் பிடிக்காவிடின், அப்பேச்சாற் பயனென்னை? "சொல்லுதல்யார்க்கு மெளியவரியவாம், சொல்லிய வண்ணஞ் செயல்" என்பதும் ஈண்டுக்கருதற்பாலது. சிறப்பன்பென்பது ஓரிடத்தன்றிப் பலவிடத்துஞ் சேறலாகாது. பல்விடத்துஞ்சேறல் சாமானியபத்தியேயாகும். ஒருபெண்மகள் தன்னைக்கைப்பிடித்த காதலனிடத்துச் செய்யும் அன்புக்கும்

தன்சோதரர் சுற்றத்தாரிடத்துச் செய்யும் அன்புக்கும் பேதமுண்டன்றே? முன்னையது விசேட வன்பும் பின்னையது சாமானிய வன்புமாம். விசேடவன்பை வேறோரிடத்துச்செய்யின், வியபிசரித்தற் குற்றம் வருதலோடு விசேடவிலக்கணமும் பிழைபடும். சாமானியவன்பையுரியசோதரரிடத்துப்போல் மற்றையோரிடத்துஞ் செய்யலாம். அதனால் வருங்குற்றம் யாதுமின்றாம். அவ்வாறே நமதுசமயக்கடவுளிடத்துச் செய்யும்பக்தி விசேஷமும், ஏனைத்தேவர்களிடத்துச் செய்யும் பக்தி சாமானியமுமாம். ஆனால்அப்பெண்மகள் தன்னுயிர்க்காதலனைப்பாராட்டி பேணிச்சோதரர் முதலியோரையு மிகழாது உபசரித்தல் போல நாமும் நம்சமயத் தெய்வத்தைப் பாராட்டுதலோடு மற்றைத் தேவர்களையு மிகழாது அவரவர்க் கேற்றவாறு உபசரித்துப் போற்றுதல் கடனாம். இவ்வாறு தத்தஞ்சமயத் தெய்வங்களிடத்து வைக்கும் விசேட வன்பே நல்லின்பந்துய்ப்பித்தற்குரியதாகும். இங்ஙனமின்றி யெல்லாஞ் சமஞ்சமமென்று கூறுவார் ஒன்றினு நிலைபெறாது தமக்குரிய ஆன்மலாபத்தை முடிவிலிழந்தவரே யாவர். சமயசாத்திர விசாரத்தால் தத்துவநிலை யதிகாரநிலை முதலிய தாரதம்மியங்களைக் கண்டுகூறல் அவரவர் அன்புநிலைப்படுதற்குபயோக மாதலானும், முன்னையசமயாசாரியர்களெல்லாரும் அங்ஙனங்கூறிப் போந்தமையானும், அதுநிந்தையாகாது. நிந்தையாவது துரபிமானத்தால் உள்ளதை யில்லதாகவும், இல்லதையுள்ளதாகவுங் கூறிப்பழித்தலேயாம். "உள்ளேன் பிறதெய்வமுன்னையல்லாதெங்களுத்தமனே" "கற்றறியேன் கலைஞானங் கசிந்துருகேனாயிடினும், மற்றறியேன் பிறதெய்வம்," என்னுந்திருவாக்குக்கள் நிந்தையின்றி விசேடவன்பினிலக்கணத்தைவெளிப்படுத்துதலுணர்க. ஆகவே, நாம் நம்பதியாகிய சிவபிரானிடத்து விசேடபக்தியாகிய உண்மையன்பு செய்தல் கடமையாம். இதரதெய்வங்களையும் உரியவாறு போற்றுதலைப்பற்றி விலக்கின்மையு முணர்தல் வேண்டும். அஃது அவரவர் மனநிலைக்கேற்ப மேற்கொள்ளத் தக்கதொன்றாம்.

இனி, சைவர்களாகிய நாம் நம் இறைவனை முறைப்படி வழிபடுதற்கு இன்றியமையாது மேற்கொள்ளத் தக்கது தீக்ஷையேயாகும். தீக்ஷையில்வழிப் பஞ்சாக்ஷர மகா மந்திர முதலியவற்றைச்

செயித்தற்குக் கூடாமையானும், சரிதை முதலிய நால்வகை நெறி யொழுக்கம் பெறப்படாமையானும் அஃது இன்றியமையாததொன் றேயாம். தீக்ஷையாவது, ஆன்மாக்களிடத்துள்ள சிவசக்தியை வெளிப்பட வொட்டாது தடையாக மறைத்து நிற்கும் மலசக்தியை க்கெடுத்துச் சிவத்துவத்தைக் கொடுப்பதாகிய சிவசக்திக்கிரியை யாகும். இதனை,

“யயா ஸ்வரூபமாவ்ருத்ய ஸம்ஸாரஸ்ய திரோதிகா |
உபைஸ்யுக்ஷீயதே பாஶைஃ ஸா ஶைவீ ஶக்தி: ||
தீ³க்ஷைவ மோசயத்யூர்த்⁴வம் ஶைவம் தா⁴ம நயத்யணும்”

எனவரும் பௌஷ்கராகமத்தானுமுணர்க. இன்னும் இத்தீக்ஷை யின்றியமையா மோக்ஷமுதலிய வெல்லா நலன்களுஞ் சித்திக்கு மென் னு முண்மையை வாயு சங்கிதை முதலிய புராணங்களானும், விரித் துக்கூறுஞ் சிவாகமங்களானு முணர்க. இத்தீக்ஷை பலதிறப்படும். அவற்றின் விளக்க விசேடங்களை யெல்லாம் ஆகமங்களுட்டெளிவா கவுணரலாம். சமய தீக்ஷைபெற்று இறைவன் உருவத் திருமேனி யைப் புறத்தொழின் மாத்திரையான் வழிபடுதலாகிய சரியையும், விசேட தீக்ஷைபெற்று அருவுருவத் திருமேனியை புறத்தொழிலக த்தொழிலிரண்டானும் வழிபடுதலாகிய கிரியையும், அருவத்திரு மேனியை நோக்கி யகத்தொழின் மாத்திரையான் வழிபடுதலாகிய யோகமும், நிருவாண தீக்ஷை பெற்று இம்மூன்றனையுங்கடந்த சச் சிதானந்தப் பிழம்பாகிய இறைவன் சொரூபத்தை வழிபடுதலாகிய ஞான நிலையும் ஆகிய இந்நால்வகை மார்க்கங்களுள், தந்தகுதிக்கே ற்பவியன்ற தொன்றை யநுட்டித்துவருதல் ஒவ்வோரான்மாக்களு க்கு முரியகடமையாகும். அறநூல்களிற் கூறப்பட்ட ஜீவதயை, கொ ல்லாமை, புலாலுண்ணாமை, கட்காம நீத்தன் முதலிய வுயர்ந்த ஒழு க்கங்களெல்லாம் ஈண்டுக்கூறிய சைவ நெறிக்கணடங்குமாதலின், வேறாக விரித்திலன். வைதிக குலத்திற் பிறந்தாருள்ளுஞ் சில நவீன அறிவுடையோர், கிரியைகள் கேவல மௌட்டியர்களுக்கே யன்றி யறிவுடையார்க்கில்லை யெனவும், அறிவுடையார் உண்மையு ணர்ந்து அந்தக்கரணங்களை மாத்திரந்திருத்திக் கோடல் போதிய தெனவுங் கூறி நித்திய கன்மங்களைப் பொருட்படுத்தாது காலத்தை வறிதேகழிக்கின்றனர், அவரெல்லாம், கன்மாநுட்டானங்களா

லன்றிச் சித்த சுத்தியுண்டாகாதென்று அநுபவ ஞானிகளாகிய நம் பண்டையோர்கூறி யவ்வாறே யொழுகிய வுண்மையையொருசிறிது முணர்ந்திலர். கீதையிற் கண்ணபிரான், தத்துவ ஞானியுங்கன்மத்தைவிடல் தவறெனவும், மேற்கோடலின்றியமையாத தொன்றெனவுந் தடை விடைகளாலருச்சுனற் குபதேசித்ததையு முணர்ந்திலர். உண்மை ஞானி யொருவர் எல்லாப்பந்தங்களையும் ஒருவிச் சுத்த ஞானப்பிரகாசத்தியைந்திருக்குங்காற் கன்மங்களவரைத் தாக்காமற்றாமே யொழியும். அந்நிலையைப் பற்றி யீண்டுச் சங்கித்தலையின்று. கன்மந்தானே யொழியப் பெற்றவொரு மகா ஞானியை நோக்கி யொருவன் அடிகாள், தேவரீர் சந்தியோபாசனை செய்யாதிருத்தலென்னை? என்று வினவினனாக, அவர்,

𑌮𑍃𑌤𑌾 𑌮𑍋𑌹𑌮𑌯𑍀 𑌮𑌾𑌤𑌾 𑌜𑌾𑌤𑍋 𑌬𑍋𑌧𑌮𑌯𑌃 𑌸𑍁𑌤𑌃।
𑌸𑍂𑌤𑌕𑌦𑍍𑌵𑌯𑌸𑌂𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑍌 𑌕𑌥𑌂 𑌸𑌂𑌧𑍍𑌯𑌾𑌮𑍁𑌪𑌾𑌸𑍍𑌮𑌹𑍇॥

(இதன் மொழி பெயர்ப்பு)

அஞ்ஞானத் தாய்மரண மானா ளஃதொன்றே
மெய்ஞ்ஞானக் கான்முளையு மேவினன்—இஞ்ஞாலந்
தன்னின் மரண சனனவிரு சூதகத்தேன்
உன்னலெங்ஙன் சந்திசெய லோர்."

என்று விடை கூறினார். அஃதாவது: "அஞ்ஞான வுருவமாகிய தாயிறந்தாள், அறிவுருவமாகிய குழந்தை பிறந்தது; இவ்விருவகை யாசௌசத்தையுமுடையனா யிருக்குங்கால் எவ்வாறு யான் சந்தியோபாசனை செய்வல்" என்பதாம். ஆதலிற் கண்ணப்பர் முதலிய முறுகிய அன்புடையார் செயலை விதியாகக்கொண்டு அத்தகுதியில்லாத நாமும் மாம்ஸ நிவேதனத்தை யிறைவனுக்குச் செய்தல் பொருந்துமா? அவர் இறைவன் கண்ணிற் புண்ணீர் வார்தல் கண்டு வருந்தி யதற்கு மாற்றாகத் தங்கண்ணைப் பறித்து வைத்து மகிழ்ந்தாரன்றே; அத்துணிவு நமக்கும் வரினன்றே அவர் செயலை நாமுங் கோடலமையும்?

அன்பர்களே!

இக்குதர்க்க நெறியை யொழித்து நமக்கு இறைவன் அருளிய வேதாகமங்களில் விதிக்கப் பட்ட செயல்களை யியன்ற வரை விடாது செய்மின்கள்;

புலாலுண்ணன் முதலிய வற்றிற்கு முதிர்ந்த அன்புடைச் சிவச் செயலாளராகிய அடியார்களை யுதாரணங்காட்டிப் புரைபடாதீர்கள்; சமயாசாரமாகிய நித்திய கன்மங்களைவிடாது செய்ய முந்துமின்கள்; ஒவ்வொரோழுக்கங்களையுஞ் சொல்லளவிற் சுருக்கியுஞ் செயலளவிற் பெருக்கியுங் காட்டுமின்கள்; நம் சமயக்கடவுளைச் சிவலிங்காதி திருமேனிகளிடத்தும், சிவனடியாரிடத்து மிருப்பதாகக் கண்டு விசேட அன்பைச் செய்மின்கள்; பிற சமயங்களும் இறைவனருளிருந்தவாறு ஆன்ம பக்குவ நோக்கி வெளிப்பட்டன வென்னு முண்மையுணர்ந்து அவற்றை யிகழன்மின்கள்; இளமைப் பருவம் காமாதிகளை யநுபவித்தற்கென்றே கருதிக் கழிக்காது நம் பெருமானை வழிபட்டுய்தற்கு மிகவேற்ற தொரு பருவ மென்றெண்ணுமின்கள்; ஆலய வழிபாட்டையும் விக்கிரகாராதனத்தையும் இயன்றவரை யிடை விடாது செய்ய விரும்புமின்கள்; உரிய கருவிநூல்களையும், அவற்றின் பயனாகச் சமய நூல்களையும் நடுநிலையுடன் ஆராய்மின்கள்: தாங்கொண்டதே பொருளெனக் கடைப்பிடியாது தம்மினுந் தாழ்ந்தார் வாயுண்மை வருமாயின் அதனை மகிழ்ந் தேற்றுக்கொண்மின்கள்; நூல்களிற் கண்டவற்றை யொழுக்கத்திற் காட்டற் கன்றிக் கலாம் விளைத்தற்குபயோகமென் றெண்ணுதீர்கள்; நம் சமயத்தையும், பாஷையையும் பிறசமயத்தார்க்கும் பிறபாஷையாளர்க்கும் வருத்தமுண்டாமாறின்றிப் பேணுமுற்படுமின்கள்; பிறர் நம்சமயம் பாஷைகளை யறியாமையான் இகழின் அவர்மனம் வருந்தாது விஷயங்களுக்கு மாத்திரந் தக்கவாறு மறுமொழிதந்து அவரைத் திருத்துமின்கள்; பின்னுந் திருந்தாராயின் அவரறியாமைக் கிரங்கியஃதொழிய நங்கடவுளை வேண்டுமின்கள்; சிவபிரான், விரும்பிக் கருணைபாலித்தற் குரியதாக ஜீவதயையென்னுந் திவ்யாமிர்தத்தை முதலில் நும் நெஞ்சக்கலத்திற் கொண்மின்கள்; நண்பர்களே! இவையெல்லாம் சீவர்களாகிய நங்கடமைகளேயாம். இத்துணைக்கடமைகளுண் மிக முக்கியமான கடமையொன்று சிவபிரானை நோக்கச்சீவர்களுக்குண்டு. அதனையும் ஈண்டுக்கூறுவேன்.

## (௯) ஓரின்றி யமையாக்கடமை.

அஃதாவது, இறைவனைநோக்க ஆன்மா ஒருவித சுதந்தரமுமின்றிப் பரதந்திரனாதலின், ஆணவமலத்தாற் பிணிப்புண்டு கிடக்கும் பெத்தகாலத்தும், தநுகரணங்களைப் பெற்றுச் சிறிது அறிவு விளக்கமுற்று உபாசனாதிகளைச் செய்யு மத்தியகாலத்தும், மலசக்தி யறவே யொழியப் பெற்றுச் சிவத்துவமெய்திப் பேரின்பநுகரும் முத்திகாலத்தும் தன்பாலிடைவிடாதமைந்து கிடக்கும் அடிமைத் தன்மையேயாம். அடிமையாவது "கண்ட விவையல்லேனு னென்

றகன்று காணாக் கழிபரமு னானல்லேனெனக் கருதிக்கசிந்த, தொண்டு" என்றபடி காணப்படும் பாசகாரியப் பொருள்களும் மேலாகிய பதிப்பொருளும் யானல்லேனென்று கருதியவழி முன்போலமுனைத்தலின்றி யோங்குணர்வி னுள்ளடங்கிநிற்றலாம். இவ்வடிமையின் முக்கிய விலக்கணமாகக் கருதவேண்டியது, ஆண்டானாகிய சிவபிரான், ஒப்பாரு மிக்காருமின்றி யாவர்க்குமேலாந்தலைவனெனவும் அடிமையாகிய யான், என்னின் ஒப்பானதுங் கீழானதுமாகிய பொருளொன்றுமின்றி யானேமிகக் கீழானவனெனவும் உள்ளவாறுணர்ந் தொழுகலேயாம். இதுகருதியே, "யாவர்க்கு மேலாமளவிலாச் சீருடையான், யாவர்க்குங் கீழாமடியேனை" என்றார் ஸ்ரீமணிவாசகப் பெருமானும். நம் சமயக்கொள்கை பலவற்றுண் மிக முக்கியமானது மிதுவேயாம். அதனாலன்றே, "தாழ்வெனுந் தன்மையோடு சைவமாஞ் சமயஞ்சாரு, மூழ்பெறலரிது" என்றுகூறும் சிவஞானசித்தியும்? இத்தொண்டு, தாதமார்க்கம், சகமார்க்கம், சற்புத்திரமார்க்கம், சன்மார்க்கமாகிய நால்வகை யொழுக்கத்தினும் ஆன்மாவைவிட்டு நீங்காததொன்றாம். "எவ்விடத்து மிறையடியை" யெனவும், "தொழும் பாகுமங்கு" எனவுங் கூறியபடி முக்தியினும் இவ்வான்மா அடிமையே யாமெனின், வேறிதன் மாட்சியை யெங்ஙனங்கூறுவேன்! உள்ளவாறு ஓரான்மா இறைவனுக்கு யான் என்றும் அடிமையே யென்றுணர்ந்து முனைப்பின்றி யொழுகுமாயின் முக்தி யின்பமாகிய பயனைச் சிவபிரான் தாமேதருவர். முக்தியை விரும்புதலும் அடிமை யிலக்கணத்துக்குக் குற்றமா மென்றால், வேறு பிரதிப்பிரயோசனங் கருதல் கூடாதென்பதைப் பற்றிக் கூறுதன் மிகையே. முக்தியென்பது எல்லாவற்றையும் விடுதலன்றே? அவ்வேண்டாமையை வேண்ட லவசியமென்று நூல்கள் கூறவும், அதனை விரும்புதலுங் குற்றமென்ப தெங்ஙனம் பொருந்துமெனின்; ஆன்மா, தன்கடமை யின்னதென் றறிந்து மேற்கொளின், இறைவனுந் தன்கடமையைச்செய்வன் என்பது தேற்றமன்றே? அஃதுணர்ந்தும், சிறிதுஞ் சுதந்தரமில்லாத இவன் எற்கு இன்னது வேண்டுமென்று விரும்புதலுந் தவறேயாம். இவ்வுண்மையை, "மண்மேல் யாக்கை விடுமாறும் வந்துன் கழற்கே புகுமாறும், அண்ணாவெண்ணக் கடவேனோ வடிமைசால வழகுடைத்தே" என்னுங்

திருவாக்கானு முணர்க. அஃதாவது, யான் அடிமையென் றுணர்ந்தபின் நின்னை வழிபடுதலேயன்றி யிவ்வுடல் கழியுமாற்றையு நின்றிருவடிப் பேறுபெறும் வழியையும், யான் எண்ணுதற் குரியனோ; அங்ஙனம் எண்ணுவேனாயின் என் அடிமையிருந்தவாறு மிக வழகிது என்பதாம். "சார்புணர்ந்து சார்புகெட வொழுகின்" என்றபடி தாதமார்க்க முதன்மூன்று மார்க்கத்தினுமொழுகுவோர் முத்தியின்பத்தில் விருப்புற்று மேன்மேற் செல்லுவர். நான்காவதாகிய சன்மார்க்கத் தொழுகுவோர் அவ்விருப்பமு மின்றித் தங்கடனிதுவென வுணர்ந்து சிறிது முனைத்தலின்றி யடங்கிநிற்பின் சிவபிரான், தங்கடனாகிய பேரின்பளித்தலை விரைந்து செய்வர்.

ஆசிரியர் சேக்கிழார் சுவாமிகளும் இவ்வுண்மை யடிமையாரைக் கூறுங்கால்,

"கேடு மாக்கமுங் கெட்ட திருவினார்
ஓடுஞ் செம்பொனு மொக்கவே நோக்குவார்
கூடு மன்பினிற் கும்பிட லேயன்றி
வீடும் வேண்டா விறலின் விளங்கினார்"

என்று பாராட்டி யிருக்கின்றனர். இவ்வருட்பாசுரத்தின் அருமையையென்னென்பேன்! இத்திருத் தொண்டின் மாட்சியைப் பற்றித் தனியே யொரு வியாசமெழுதி வெளிப்படுத்தக் கருதியுள்ளேனாதலின் ஈண்டு விரித்திலன். முடிவாகக்கூறுமிடத்து இவ்வடிமையே ஆன்மா பயன் குறியாது மேற்கொள்ள வேண்டுவதொன்றென்பது இவ்வாராய்ச்சியால் விளக்கமாம்.

## (௧௦) இதன் பயன்.

இனி, இவ்வின்றியமையாக் கடமையாகிய அடிமையின் பயனைப்பற்றிச் சிறிது கூறுவேன். இதன் பயன் வீட்டின்பமேயென்பது முன்னர்ப் பெறப்பட்டதாயினும், இடைக்கணுண்டாம்பயன்களுமுள. ஆன்மா, எல்லாம் அவன் செயலேயன்றித் தன் செயலன்றென் றுணர்ந்து அருள்வழிநிற்பின், அதனாற் செய்யப்படுங் கன்மங்கள் அதனைச்சாரா. கன்மங்கள் பெத்தகாலத்து நான் செய்கின்றேனென்று கருதுவதால் ஆன்மாவைத்தாக்கும். முத்திகாலத்து யான் எனதென்னுமிருவகைப்பற்றுமின்றி யெல்லாமவன் செயலேயென்றுணர்

ந்து அருள்வழி நிற்றலால் அக்காலத்துச் செய்யப்படுங்கன்மங்கள் அவ்வான்மாவைத்தாக்கா. பிராரத்தவினையநுபவித்தே தீரவேண்டுமெனினும், அஃதுஉடலூழாய்க்கழியுமன்றியுயிர்க்குஇன்பதுன்பங்களைச் செய்யாதென்பதாம். இவ்வுண்மையை, "நாமல்ல விந்திரிய நம்வழியி னல்லவழி, நாமல்ல நாமு மரனுடைமை—யாமென்னின், எத்தனுவி னின்று மிறைபணியார்க் கில்லைவினை, முற்செய்வினை யுந்தருவான்முன்" என்னுமெய்கண்டார் திருவாக்கானுணர்க. இதனால் எல்லாம் அவன் செயலென்றிருத்தன்மிக நலமென்று போதரலான், தாம் செய்யுந்தீவினைகளுக்கும் இதனையே பிரமாணமாகக் காட்டமுற்படலாமாலெனின்; நன்று நன்று! எப்பொருளையுஞ் சிவமயமாகக் கண்டு தானொரு முதலென்பதின்றி யவனே தானேயாகிய வந்நிலையினிற்கும் முத்தனுக்கும், கண்டபொருளெலாமின்பஞ்செய்வனவென்றும், அவை யெனக்கெனக்கென்றும், யானே நுகருமுதலென்றுங் கருதிமலவாய்ப்பட்டுழலும் பெத்தனுக்கும் எத்துணை வேறுபாடுளதென்பதையுற்று நோக்குவார்க்கு உண்மைபுலனாம். இதனால் முடிவுவரை பெரும்பயனைச் செய்வது, இத்திருத்தொண்டேயென்று அதன் மாட்சியுணர்ந்து அவ்வொழுக்கத்தை மேற்கொள்ளுதலே நங்கடமையாமென்பதும், விதி விலக்கைக் கடந்து நிற்றல் நம்மனோர்க்குப் பொருந்தாதென்பதும் விளக்கமாம்.

## என் அன்புள்ள சகோதரர்களே!

இத்திருத்தொண்டையியன்றவரை செய்தலே சீவர்களின் முக்கிய கடமையென்றுணர்ந்து நம்பெருமானிடத்து எஞ்ஞான்றும் அன்புப்பணிபூண்டு ஒழுகுமின்கள்; பயன் செய்வது அவர் கடமை யென்பதை நிச்சயமாக நம்புமின்கள்; திருத்தொண்டு புரிவார் யாவரும் நம் உரிமைத்தமரென்பதையுள்ளவாறுணர்மின்கள்; சிவபிரானாகிய பரமபிதாவினது பேரானந்தப் பெருஞ்செல்வத்தைப் பெறுதற்குரிய மக்கள் நாமேயென்றுணர்ந்து பெற்று இன்புறுமின்கள்; என் புன்சொற்களிற் பொதுளிய பிழைகளையென்னறிவின் சிறுமை கருதிப்பொறுத்துக் கொண்மின்கள்; இவ்வளவேயான் இப்பேரவைக்கண் இன்று செய்யவேண்டிய கடமையென்பதையுணர்ந்து இவ்வியாசத்திற் பரந்துகிடக்கும் பொருள்களைப்பற்றிய தொகையுரைக்குப் பொறுமையுடன் சிறிது செவிசாய்மின்கள்.

## தொகையுரை.

இத்துணையுங்கூறிய வாற்றாற் போந்தபொருள்கள்:—

பரமகருணாநிதியாகிய சிவபிரானே வேதாகமங்களால், நிச்சயிக்கப்படும் பரம்பொருளென்பதூஉம், கருணையினிலக்கணமின்னதென்பதூஉம், அதனை

முழுவிலக்கணத்தோடு ஆனந்தநிலைமை, பிறர்க்கின்றாகச் சிவபிரான் ஒருவர்க்கே யுரித்தென்பதூஉம், அவர் இக்கருணையையே சத்தியாகவும் திருமேனிகளாகவுங் கொண்டு வெளிப்பட்டருளுவ ரென்பதூஉம்: தங்கருணையமுதை யடியார்க்கு வலிந்து அச்சமுறுத்தியூட்டுவரென்பதூஉம், அடியார் பொருட்டு மிக வெளியராதலையுடையரென்பதூஉம், அவர் கருணை, யறக்கருணை மறக்கருணையென விருவகைப் படுமென்பதூஉம், அக்கருணையின் பயனாகவே ஆணவமலத்தாற் பிணிப்புண்டுகிடக்கும் ஆன்மாமாயாகன்மங்களாற் சிருட்டியாதிகளையுற்று அறிவு விளக்கம்பெறுமென்பதூஉம், அதுவே, இறைவனைக்காண்டற்கும், ஆனந்தவடிவனாகிய அப்பெருமானைப்பெறுதற்குங் கருவியாகவுள்ளதென்பதூஉம், சீவர்களின் றன்மையின்னவென்பதூஉம், கடமையாவதிதுவென்பதூஉம், உலகியற்கடமைகளிவை யென்பதூஉம், சமயசம்பந்தமாகச் சிவபிரானிடத்துச் செய்யுங்கடமைகளிவை யென்பதூஉம், சமயங்களின் சமரசவுண்மையை யிவ்வாறு கோடல் வேண்டுமென்பதூஉம், தீக்ஷைபெறல், சரியாதிமார்க்கங்களினின்று கன்மங்களை விடாமற் சிவபிரானை வழிபடன் முதலியவையெல்லாஞ் சமயக்கடமைகளாமென்பதூஉம், அவற்றுண், முக்கியகடமை ஆன்மா, தான்பெத்தகாலத்தும் முத்திகாலத்தும் மேற்கொள்ளத்தக்க அடிமைத்திறமேயா மென்பதூஉம், அதன்றன்மை மாட்சிமையின்ன வென்பதூஉம், அதனாலான்மா வெய்தும் பயனின்ன வென்பதூஉம் இத்திருத்தொண்டை ஆன்மா தன் கடமையென மேற்கொளின், அதற்கு வீட்டின்பந்தருதலைச் சிவபிரான் றங் கடமையென மேற்கொள்வரென்பதூஉம் பிறவுமாம்.

அறிஞர்களே!

யான் இவ்வுபந்யாஸாரம்பத்திற் கூறிய தேவாரப் பாசுரத்தில்,

> தன்கடன் னடியேனையுந் தாங்குதல்
> என்கடன் பணிசெய்து கிடப்பதே”

என்னும் பிற்பகுதியாகிய இவ்விரண்டடிகளுமே முறையே சிவபிரான் கருணையையும், சீவர்கள் கடமையையும் புலப்படுத்தி, இவ்வுபந்யாஸத்தை யினிது நிறைவேற்றின வென்பதை மீண்டு ஞாபக முறுத்துகின்றேன். சைவசமயமுஞ் சிவதருமமுந் தமிழ்மொழியும் நீடுவாழ்க.

ஓம்.

இங்ஙனம்,
அன்பன்,
மு. கதிரேசன்,
மகிபாலன்பட்டி.

ஆனந்த வருட
மாசிமீ ௨௪௳